**இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைவரத்தையும், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள், மற்றும் காசுப் பாய்ச்சல் என்பனவற்றையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி.)**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இ.க.நி. 18 இன் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட நாள் முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் சொத்துக் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டிற்கும் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகையில் இ.க.நி. 9 இன் பிரகாரம் முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடு என்பவற்றில் இருந்து உருவான காசின் அளவு என்பன காசுப்பாய்ச்சற்கூற்றின் மூலம் தெளிவாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 கணக்குகளில் இருந்தான விடுபாடுகள்**

103-1003-9-3320761 ஆம் கணக்கிலக்க நடைமுறைக்கணக்கின் 2010 திசெம்பர் 30 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரமான ரூபா 385,769 மீதி நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது.

**1.2.3 பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்**

வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த வைப்புக்களில் ரூபா 868,089 தொகையான கடன் மீதி நடைமுறைப் பொறுப்புகளில் இருந்து கழிக்கப்பட்டதன் காரணமாக அம் மீதி நடைமுறைப் பொறுப்புக்களிலிருந்து விடுப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்பு அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.4 இணக்கம் செய்யப்படாத கணக்கு மீதிகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பின்வரும் கணக்குகளிலும் இவற்றிற்குரித்தான பட்டோலைகளிலும் காண்பிக்கப்பட்ட மீதிகளிற்கு இடையே ரூபா 749,146 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி | பட்டோலையின் படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| உள்நாட்டு கொள்வனவு முற்பணம் | 5,864,525 | 5,865,400 | 876 |
| இடர் கடன்கள் | 13,523,338 | 13,348,283 | 175,054 |
| எரிபொருள் முற்பணம் | 987,627 | 431,036 | 556,591 |

| | | | |
|---|---|---|---|
| துவிச்சக்கர வண்டி கடன் | 113,625 | 130,250 | 16,625 |
| | --------------------- | -------------- | ----------- |
| | 20,489,115 | 19,774,969 | 749,146 |
| | ============ | ======== | ====== |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கணக்குகள்

(அ) 25 மீன்பிடிக் குழுவினருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி, மீன் குஞ்சுகளின் உற்பத்திப் பிரிவினை நிர்மாணிப்பதற்காக அதிகாரசபையினால் ஏற்பட்ட கிரயம், தவணைப்பணமாக மீன் குஞ்சுகளின் உற்பத்தி நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,170,196 பெறுமதியான அத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீன்குஞ்சுகளுக்காக மீன் முட்டை உற்பத்தி நிறுவகங்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,316,597 தொகையான கடனை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் காலம் 1 ½ ஆண்டுகளைக் கடந்திருந்தது.

(இ) அதிகாரசபையால் தனியார் நிறுவகங்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டு உடன்படிக்கையின் படி, 2010 சனவரி முதல் மாதாந்த குத்தகை வாடகையாக ரூபா 309,166 தொகை அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்க வேண்டிய தொகை ரூபா 2,091,660 ஆகக் காணப்பட்டது.

(ஈ) பொலநறுவை நன்னீர் மீன் விற்பனை நிலையம், தனியார் நிறுவகம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதன் காரணமாக 2007 ஒக்டோபர் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை பெற வேண்டிய தொகை ரூபா 669,375 ஆகக் காணப்பட்டது.

(உ) அதிகாரசபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த அழகு மீன்களில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 80,830 தொகையை அறவிட்டிருக்கவில்லை.

(ஊ) சிறிய அளவிலான மீன் குஞ்சு உற்பத்தி அலகை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் ரூபா 11,094,329 தொகையான கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 25 குஞ்சு உற்பத்தி அலகுகள் ஒப்படைக்கப்பட்டிருந்த 25 அமைப்புகளினால் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,170,196 தொகையான சந்தாப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 707,899,250 தொகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பின்வரும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | **விபரம்** | **பெறுமதி** | | **கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|---|
| | | **ரூபா** | | |
| (i) | செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் கூலிகளும் | 566,093 | * | பட்டோலை காலப்பகுப்பாய்வு |
| (ii) | மதிப்பிழந்த காசோலைகள் | 552,652 | * | பட்டோலையும் கோவையும் |
| (iii) | நிலையான சொத்துக்கள் | 706,780,505 | * | நிலையான சொத்துப் பதிவேடு |
| | | | * | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| | | 707,899,250 | | |

## 1.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் (நி.பி) | |
| | நி.பி.177 | தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம், ரம்படகல்ல நிலையத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 42,204 தொகை 07 சந்தர்ப்பங்களின் போது 06 நாட்கள் முதல் 13 நாட்கள் வரையிலான தாமதத்துடன் வங்கியில் இடப்பட்டிருந்தது. |
| | நி.பி. 394 (அ),(ஆ) | இரத்துசெய்யப்பட்ட காசோலைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பிழக்கப்பட்டமை தொடர்பான விபரம் காசோலை அடிக்கட்டையில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,648,323 பெறுமதியான இரத்துசெய்யப்பட்ட காசோலைகள் தொடர்பில் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி.394(இ) | அதிகாரசபையினால் ரூபா 552,652 பெறுமதியான திரும்பிய காசோலைகள் அரசாங்க வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | நி.பி.225(1) மற்றும் 232(2) | அதிகாரசபையின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுகையில் அவ் உறுதிச்சீட்டுக்களின் இலக்கமிடல், கொடுப்பனவு உறுதிப்படுத்தல், பரீட்சித்தல், கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை இலக்கத்திலும் எழுத்திலும் எழுதுதல் என்பன செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவை | |
| | 2 ஆம் அத்தியாயம் 10(1) ஆம் பிரிவு | நியமனம் கிடைக்கப்பட்ட நாள் முதல் ஒரு மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை அறிக்கை கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் 25 கோவைகள் தொடர்பாக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| | 06 ஆம் அத்தியாயம் | தனியாள் கோவைகளில் வரலாற்றுத் தாள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2008 யூலை 28 ஆம் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | அதிகாரசபையின் உத்தயோகபூர்வ வாகனத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் இருவரினால் 2010 சனவரி முதல் மே வரை மாதாந்த எரிபொருட் படிப்பணத்திற்கு மேலதிகமாக ரூபா 115,600 தொகையான எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 47,757,735 பற்றாக்குறையானதுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 27,561,973 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 20,195,762 தொகையால் முன்னேற்றம் காண்பிக்கப்பட்டது. முன்னேற்றம் 136% ஆக இருந்தது.

(அ) அதிகாரசபையின் மொத்த வருமானம் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 35,525,664 ஆல் வீழ்ச்சியுற்றிருந்ததுடன் இது 15% சதவீதமாகும். அரசாங்க மானியக் குறை, இறால் உற்பத்தி வருமான வீழ்ச்சி, அழகிற்காக வளர்க்கப்படும் மீன்கள் இலவசமாக வழங்கப்பட்டமையால் பெறுவனவு குறைவடைந்தமை போன்றன இதற்குக் காரணமாகியிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் செலவினங்களில் பின்வரும் செலவினங்கள் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது பின்வருமாறு அதிகரித்திருந்தன.

| விடயம் | 2009 | 2010 | வேறுபாடு சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு | 6,503,377 | 14,224,038 | 119 |
| தொடர்பாடல் | 1,934,243 | 2,041,667 | 6 |
| சுத்திகரிப்பு | 1,020,052 | 1,982,640 | 94 |
| பிரசாரம் | 232,287 | 920,053 | 296 |

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது கடல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஆண்டு | கடல் நீர் மீன் உற்பத்தி | நன்னீர் மீன் உற்பத்தி |
|---|---|---|
| | மெ.தொன் | மெ.தொன் |
| 2009 | 293,170 | 46,560 |
| 2010 | 330,240 | 51,390 |

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கடல் நீர் மீன் உற்பத்தி அதிகரிப்பு 13% ஆகக் காணப்பட்டதுடன் நன்னீர் மீன் உற்பத்தியின் அதிகரிப்பு 10% ஆகக் காணப்பட்டது.

### 2.2.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1999 யூன் மாதம் அதிகாரசபையின் கடமைக்குச் சமூகமளித்த உத்தியோகத்தர் ஒருவருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக 2007 மார்ச் 15 ஆம் திகதி முதல் 2010 மார்ச் 14 ஆம் திகதி வரை 3 ஆண்டு காலத்திற்கு சம்பளமற்ற வெளிநாட்டு வீவு வழங்கப்பட்டிருந்தது. அதிகாரசபைக்கும் உத்தியோகத்தருக்கும் 4 ஆண்டு கால கட்டாய சேவைக்காலத்திற்கும் ரூபா 226,560 தொகைககும் உடன்படிக்கையின் பிரகாரம் பிணை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 03 ஆண்டு காலம் 2010 மார்ச் 15 ஆம் திகதி பூர்த்தியாகியிருந்த போதிலும் அவர் இது வரை கடமைக்கு சமூகமளித்திராததுடன் இது தொடர்பாக அதிகாரசபை எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) இறால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு மீளளிப்பு அடிப்படையில் வழங்கப்படுவதற்காக அதிகாரசபை அக் கம்பனியுடன் ஓர் உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இறால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக நவீனமயமாக்கலின் மூலம் உழைக்கும் இலாபத்தில் 80% படி தவணை முறையில் அதிகாரசபைக்கு மீளளிக்கப்படுவதற்கு உடன்பட்டு தனியார் கம்பனிக்கு ரூபா 3,161,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது உழைக்கப்பட்ட இலாபத்தில் அதிகாரசபைக்கு உரித்தான பங்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரம்படகல்ல அழகு மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 07 சேற்றுக்குளங்கள் மிகப்பழமை வாய்ந்தவையாகக் காணப்பட்டதுடன், இதில் இருந்து நீர் கசிவேற்பட்டு மதகுகள் செயற்பாடற்றமையால் குளத்திற்கு நீர் பாய்ச்சப்படுவதற்கும் அகற்றுவதற்கும் மின்சாரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அதிகாரசபையின் கிரயம் உயர்வடைந்திருந்தது.

(ஈ) இரம்படகல்ல மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தும் செயற்பாட்டின் போது போதியளவு தொட்டிகள் இன்மையால் மீன் உற்பத்தி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) 2010 யூலை 06 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கையின் மூலம் 2010 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் அழகு மீன்கள் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் அதிகாரசபையின் பதிவாகிய மீன் வளர்ப்பில் ஈடுபட்டோருக்கு மாத்திரமே கோரப்பட்ட ஒழுங்கில் விநியோகிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பதிவுப் பதிவேடு ஒன்று அதிகாரசபையினால் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மத்திய நிலையங்களின் ரீதியாக வெவ்வேறாக வருமானச் செலவினங்கள் பதியப்பட்டிராமையால் அதிகாரசபையின் 9 நிலையங்களில் ஏற்பட்ட செலவினங்களுக்காக எய்தப்பட்ட நலன்கள்

குறித்த வெற்றிநிலையையும் முன்னேற்றத்தையும் தீர்மானிக்க முடியாதிருந்தது.

(எ) கடமைத் தேவைப்பாடு குறிப்பிடப்படாது, முன்னங்கீகாரம் இன்றி இல. என்ஏ – 5455 ஆம் இலக்க வாகனம் 2010 ஏப்ரல் 12 ஆம் திகதி நீர்கொழும்புப் பகுதியில் துடல்ல கலாவெவ பயிற்சி நிலையத்தின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஏ) அதிகாரசபையின் சாரதியல்லாத வெளியாள் ஒருவரால் அங்கீகாரம் இன்றி 11 நாட்களாக அதிகாரசபையின் இல. என்ஏ – 5455 ஆம் இலக்க வாகனம் செலுத்தப்பட்டு காரியாலயத்திற்கு வெளியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஐ) இரம்படகல்ல மீன் இனவிருத்தி நிலையத்தை விஸ்தரிப்பதற்காக தனியார் நிறுவகம் ஒன்றில் இருந்து குத்தகை அடிப்படையாக காணி பெறப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது குத்தகைக்கு அல்லாமல் 02 ஆண்டுகளுக்கு மேலாக வருடாந்த வாடகையும் வைப்புமாக ரூபா 172,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்குத்தகை உடன்படிக்கை மீளாய்வாண்டின் போதும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பயிற்சியாளர்களுக்காக வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் வழங்கப்படாது பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அச்சுப் பிழைகளுடனான சான்றிதழ்கள் அழிக்கப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

### 2.2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

அதிகாரசபையின் தலைமைக் காரியாலயம் பலவத்தைக்குக் கொண்டு செல்லப்படுகையில் அக்கட்டிடத்தில் அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 641,175 பெறுமதியான பொருத்திகள் விற்பனைக்காக கேள்வி கோரப்படுவதற்கான விளம்பரத்திற்காக ரூபா 38,270 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அப் பொருத்திகள் பலவத்தையில்

ஸ்தாபிக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அச் சொத்துக்கள் காணாமற்போயிருந்ததுடன் இவை தொடர்பாக நி.பி. 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளைவற்ற சொத்துக்கள்**

-----------------------------------------

இல. 101 – 6648 மோட்டார் சைக்கிள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாடுகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வைப்புக்கள்
(ஆ) கடன்பட்டோர்
(இ) மீன் உற்பத்தி
(ஈ) வருமானம்
(உ) வாகனம்
(ஊ) சொத்துக்கள்
(எ) குத்தகைக்கிடுதல்